பக்கங்கள்: 06

காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 12 வெள்ளிக்கிழமை 27.11.2020 கதிர் 253


## 1,067 கிலோ மஞ்சள் புத்தளத்தில் மீட்பு!

கடற்படையால் புத்தளத்தில் நடத்தப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது 1067 கிலோகிராம் எடையுள்ள உலர்ந்த மஞ்சளுடன் சந்தேகநபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் - மன்னார் வீதியில் உள்ள 02 ஆவது மைல் கல்லில்

2

# பிரிட்டன் நாடாளுமன்றின் மீது கார்த்திகைப் பூவை ஒளிரச்செய்து மாவீரர் நினைவேந்தல் அனுஷ்டிப்பு!

### இலங்கை அரசுக்கு புலம்பெயர் செயற்பாட்டாளர்கள் நெத்தியடி




லண்டன், நவம்பர் 27

மாவீரர் நாளை நினைவுகூரும் முகமாக தமிழீழ ஆதரவு புலம்பெயர் செயற்பாட்டாளர்கள் பிரிட்டன் நாடாளுமன்றக் கட்டடத்தின் மீது கார்த்திகைப் பூவின் படத்தை ஒளிரச் செய்துள்ளனர்.

ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கெடுக்கும் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு இம்முறை லண்டனில் நடைபெறவில்லை.

கொரோனா வைரஸ் நெருக்கடி காரணமாக இம்முறை மாவீரர் நாள் நிகழ்வுகளை வீடுகளுக்குள்ளும் இணைய ஒன்றுகூடல் வாயிலாகவும் நிகழ்த்தும்படி செயற்பாட்டாளர்கள் அறிவித்திருந்தனர்.

இந்த நிலையிலேயே, பிரிட்டன் நாடாளுமன்றக் கட்டடத்தின் மீது கார்த்திகை பூ படத்தை ஒளிவீச்சு மூலம் பதிந்து மாவீரர் நாளை செயற்பாட்டாளர்கள் நினைவுகூர்ந்துள்ளனர்.

நாம் நினைவுகூர்கின்றோம். இலங்கை அரசின் இனப்படுகொலையிலிருந்து விடுதலை பெறுவதற்காகப் போராடிய மாவீரர்களை நினைவுகூர்கின்றோம் என்ற வாக்கியங்களையும் ஆங்கிலத்தில் அவர்கள் ஒளிரவிட்டிருந்தனர்.

பொதுச் சுகாதார நெருக்கடி காரணமாக

2

## இரணைப்பாலை துயிலும் இல்லம் இராணுவத்தினர் முற்றுகைக்குள்!



முல்லைத்தீவுமாவட்டத்தின்புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரணைப்பாலை மாவீரர் துயிலும் இல்லவளாகத்தில் கடந்த வருடங்களில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் மிகவும் பிரமாண்டமாக

2

### அரச படைகளின் பலத்த கெடுபிடிகளுக்கு மத்தியிலும்

# தமிழர் தாயகத்தில் வீடுகளில் இன்று மாவீரர் நினைவேந்தல் ஈகச் சுடர்கள்



**தமிழர்களின் உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தில் இறுதி வரைப் போராடி வீரச்சாவடைந்த வீரமறவர்களை நினைவுகூரும் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு இன்று தாயகத்தில் வீடுகளில் நடைபெற்றன.**

2

## முல்லைத்தீவில் திரும்புமிடமெல்லாம் இராணுவத்தினர் தீவிர கண்காணிப்பு

மாவீரர்நாள்நினைவேந்தலையொட்டி முல்லைத்தீவு நகரில் திரும்பும் இடமெல்லாம் ஆயுதம் தரித்த இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

முல்லைத்தீவுபொலிஸ்பிரிவுக்குட்பட்ட முல்லைத்தீவு கடற்கரை வளாகத்தில்



### கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட

## கரவெட்டி பிரதேச சபை 'பட்ஜட்' நிறைவேற்றம்!!!

(ந.லோகதயாளன்)

வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் 2 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

2

## இரத்ததானத்துக்கும் தடை!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.27

மாவீரர் நாளின் எதிரொலியாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் இரத்ததான நிகழ்வுகளிற்கும் படையினர் தடை விதித்தனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, தெல்லிப்பளை வைத்தியசாலை மற்றும் பருத்துறை வைத்தியசாலைகளின் இரத்த வங்கிகளில் இரத்த தானம் செய்ய விரும்புபவர்கள்

2

## வடக்கிலுள்ள வைத்தியசாலைகளுக்கு அச்சமின்றி சிகிச்சை பெற வர முடியும்

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளுக்குப் பொதுமக்கள் அச்சமின்றி சிகிச்சைக்கு வர முடியும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்வைத்தியகலாநிதிஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

2

## போதைப்பொருள் கடத்தலுக்கு கடற்படையினர்தான் பொறுப்பு

### சபையில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு

மீனவர்களின் செயற்பாடுகளில் கடும் கெடுபிடிகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்து கடற்படையினர் செயற்படும் நிலையில், போதைப்பொருள்களும் மஞ்சளும்

2




## தமிழர் தாயகத்தில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் புலனாய்வாளர்கள் என அரச படைகளின் பலத்த கெடுபிடிகளுக்கு மத்தியில் வீடுகளில் இன்று மாலை 06.07 மணிக்கு ஈகச் சுடர்களை ஏற்றி மாவீரர்களைத் தமிழ் மக்கள் அஞ்சலித்தார்கள்.

வடக்கு, கிழக்கிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள், நினைவுத் தூபிகள் மற்றும் பொது இடங்களில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த இம்முறை நீதிமன்றங்கள் தடை உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தமையால் தமிழ் மக்கள் தத்தமது வீடுகளில் மாவீரர்களை இன்று நினைவுகூர்ந்தார்கள்.

தமிழ்த்தேசியக்கட்சிகளின் அழைப்பின் பிரகாரம் வீடுகளில் இம்முறை மாவீரர் நாள் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

மாவீரர் நாளையொட்டி தமிழர் தாயகத்தின் மூலைமுடுக்கெல்லாம் ஆயுதம் தாங்கிய அரச படைகள் மக்களை அச்சுறுத்தும் வகையில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். எனினும், மக்கள் தத்தமது வீடுகளில் துணிவுடன் மாவீரர்களை நினைவேந்தினார்கள்.

## போதைப்பொருள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறு தடைகளின்றி கடத்தப்படுகின்றன?

-இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சபையில் இன்று கேள்வி எழுப்பினார்.

2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கடற்தொழில், பெருந்தோட்டத்துறை மற்றும் காணி அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்றது.

இந்த விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வன்னி மாவட்டத்தில் தென்னிலங்கை மீனவர்களின் ஆக்கிரமிப்பு மற்றும் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்புகள் அதிகரித்துள்ளன. இதற்குத் தீர்வு காணுமாறு தொடர்ச்சியாகக் கூறி வந்தாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது குறித்து கவனம் செலுத்துவதில்லை.

மேலும் மீனவர்கள் கடலுக்குச் செல்லும்போது அனுமதிப்பத்திரங்கள் கேட்கப்படுவதுடன், கடுமையான சோதனைகளுக்கும் உட்படுத்தப்படுகின்றனர். இந்த நிலையில் போதைப்பொருள்களும் மஞ்சளும் எப்படி எந்தவித தடையுமின்றி கடத்தப்படுகின்றன? இதற்குக் கடற்படையினரே பொறுப்புக்கூற வேண்டியவர்கள்.

எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை வேறு நபர்கள் பயன்படுத்துவதன் காரணமாகவே நாட்டில் மஞ்சள், போதைப்பொருள் கடத்தல் அதிகரிக்கின்றன. இதனைத் தடுக்க வேண்டுமென்றால் மீனவர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய நடவடிக்கையெடுக்க வேண்டும். - என்றார்.

## கரவெட்டி பிரதேச சபை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

31 உறுப்பினர்களைக் கொண்ட வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்டது.

சபையின் அடுத்தாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு தவிசாளர் தங்கவேலாயுதம் ஐங்கரனால் சபையில் முன்வைக்கப்பட்டது.

இதையடுத்து நடத்தப்பட்ட பகிரங்க வாக்கெடுப்பில், வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 16 வாக்குகள் அளிக்கப்பட்டன. எதிராக 14 வாக்குகள் கிடைத்தன.

ஆதரவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 8 உறுப்பினர்களும், ஈ.பி.டி.பி., தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலா 3 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்களும் என 16 உறுப்பினர்கள் ஆதரவு அளித்தனர்.

எதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 7 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 7 உறுப்பினர்களும் வாக்களித்திருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் சபைக்கு சமுகமளிக்கவில்லை.

ஏற்கனவே தமது கட்சியினரே தனக்கு எதிராகச் செயற்படுவதால் தான் பதவி விலகப் போவதாக தவிசாளர் த.ஐங்கரனால் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்குக் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் கட்சியின் தலைமை அவருடைய பதவி விலகலை ஏற்றுக்கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்கிலுள்ள வைத்திய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அண்மையில் கிளிநொச்சியில் கொரோனா வைரஸ் தொற்றுடன் இனங்காணப்பட்ட வயோதிபர் ஒருவர், கடும் காய்ச்சலுடன் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்படும் போது போதிய பாதுகாப்பு நடவடிக்கையுடனேயே சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு இருந்தார்.

இருப்பினும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவரோடு நேரடித் தொடர்பில் இருந்த மூன்று மருத்துவப் பணியாளர்கள் தனிமைப்படுத்தலுக்கும், மேலும் 7 மருத்துவப் பணியாளர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளார்கள். அவருடன் நேரடியாகத் தொடர்புடைய உறவினர்களும் நோயாளர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். எனவே, வடக்கு மாகாணத்திலுள்ள வைத்திய சாலைகளில் பொது மக்கள் அச்சமின்றி சிகிச்சைக்கு வர முடியும் - என்றார்.

# கிளிநொச்சி, காரைநகரைச் சேர்ந்த இருவருக்கு கொரோனாத் தொற்று

யாழ். பல்கலைக்கழக கொரோனா பரிசோதனைக் கூடத்தில் இன்று இடம்பெற்ற பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் இருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை முதற்கட்ட தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

கிளிநொச்சி 155ஆம் கட்டைப் பகுதி தண்ணீர் விநியோக கடையின் வாகனச் சாரதி ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, கொழும்பிலிருந்து காரைநகர் திரும்பியிருந்த காரைநகரைச் சேர்ந்த நபர் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

## இரத்ததானத்துக்கும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழமையாக சென்று அங்கே குருதி கொடை செய்வது வழமையாகும்.

இருந்தபோதும் மாவீரர் தின நினைவாக ஆண்டு தோறும் பலர் வழமையாக இந்த இரத்த தானம் செய்வது வழமையாகும் எனத் தெரிவித்து இராணுவத்தினர், புலனாய்வாளர்கள் குறித்த வைத்தியசாலைகளுக்குச் சென்று இரத்த தான நிகழ்வுகள் இடம்பெறக்கூடாது, அவ்வாறு இடம் பெற்றால் நெருக்கடியைச் சந்திப்பீர்கள் என அச்சுறுத்தியுள்ளனர்.

இவ்வாறு விடுத்த அச்சுறுத்தல் காரணமாக நேற்று வைத்தியசாலைகளிற்கு இரத்த தானம் செய்யச் சென்றவர்கள் அனைவரும் திருப்பி விடப்பட்டனர். வைத்தியசாலைகள் இரு நாள்களாகத் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டன.

## முல்லைத்தீவில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2009 இற்கு முன்னர் கடற்புலிகளின் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. அதனப்பின்னர் குறித்த வளாகத்தில் கடந்த 5 வருடங்கள் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் பிரமாண்டமாக இடம் பெற்றன

இம்முறை நீதிமன்றம் வழங்கிய தடை உத்தரவைத் தொடர்ந்து குறித்த இடத்தில் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் நீதிமன்றக் கட்டளையை மீறி நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற விடாது தடுக்கும் முகமாக அந்தப் பகுதியில் நிலை கொண்டுள்ளனர்

குறித்த பகுதியை விடவும் முல்லைத் தீவு நகருக்குள் திரும்பும் இடமெல்லாம் ஆயுதம் தரித்த இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். வீதியில் ரோந்து நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர். இதனால் மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

## இரணைப்பாலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றன.

இம்முறை நீதிமன்றம் வழங்கிய தடை உத்தரவைத் தொடர்ந்து குறித்த இடத்தில் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் நீதிமன்றக் கட்டளையை மீறி நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறவிடாது தடுக்கும் முகமாக குறித்த பகுதியில் நிலைகொண்டுள்ளனர்.

குறித்த பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் நிலைகொண்டுள்ள விடயத்தை ஊடகங்கள் ஒளிப்பதிவு செய்யவும் அவர்கள் அனுமதி மறுத்து வருகின்றனர்.

## பிரிட்டன் நாடாளுமன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று பாரிய பொது நிகழ்வுகளை எங்களால் நடத்த முடியாது என்பதால், எங்கள் மாவீரர்களை வேறு வடிவத்தில் நினைகூரத் தீர்மானித்தோம் என்று இளம் செயற்பாட்டாளர் ஒருவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

எங்கள் தாயகத்தில் எங்கள் மக்கள் மாவீரர்களை நினைவுகூர்வதை முடக்குவதற்கு இலங்கை அரசு முயல்கின்றது என மற்றுமொரு செயற்பாட்டாளர் கூறியுள்ளார்.

## 1,067 கிலோ மஞ்சள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்ட இந்த விசேட நடவடிக்கையின்போது, வடமேற்கு கடற்படை கட்டளைப் பகுதியிலுள்ள உப்பு உற்பத்தி நிலையத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த உலர்ந்த மஞ்சள் கண்டுபிடிக்கப்பட்டது.

1067 கிலோ எடையுள்ள மஞ்சள் 25 சாக்குகளில் அடைக்கப்பட்டிருந்தன. இதற்கிடையில், இந்தச் சம்பவம் தொடர்பாக ரகுமான் நகரில் 04ஆவது மைல் போஸ்டில் இருந்து ஒரு சந்தேகநபரும் கடற்படையால் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரையும் மற்றும் உலர்ந்த மஞ்சளையும் சட்ட நடவடிக்கைகளுக்காகப் புத்தளம் பொலிஸார் பொறுப்பேற்றனர்.

**வேலைக்கு ஆள் தேவை**

**நோயாளர் நலன்புரிச் சங்கம்**
**ஆதார வைத்தியசாலை**
**தெல்லிப்பழை.**

**நோயாளரைப் பராமரிப்பதற்கு ஆண்/ பெண் இருபாலாரும் தேவை.**

**லயன் சி.ஹரிகரன்**
**077 223 0535**
**077 900 5856**






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## எது பயங்கரவாதம்?

**தமிழர் தாயகத்தில் இன்று மாவீரர் தினம்.**

**நீதிமன்றங்கள் ஊடாக இலங்கை அரசு பெற்றுக் கொண்ட தடை உத்தரவுகள் காரணமாக தமிழ் மக்கள் பொது நினைவேந்தல் நிகழ்வு எதனையும் செய்ய முடியாதவர்களாக இருக்கின்றனர். அதனால் அவர்கள் தத்தமது வீடுகளில் இருந்தவாறே நினைவேந்தலை முன்னெடுக்கின்றனர்.**

**இத்தகைய தடை உத்தரவுகளை நீதிமன்றங்கள் மூலம் பெற்றுக் கொள்வதற்கு ஆளும் கோட்டாபய ராஜபக்ஷ அரசு கூறிய பிரதான காரணம், நினைவேந்தப்படும் விடுதலைப் புலிகள் 'பயங்கரவாதிகள்', 'தடை செய்யப்பட்ட இயக்கத்தை' சேர்ந்தவர்கள் என்பதாகும்.**

**இதனால்தான், 'யார் பயங்கரவாதி?' என்ற கேள்வி எழுகின்றது. இந்தக் கேள்விக்கு நல்ல ஒரு பதிலை சிங்கள மக்களுக்கு வழங்கியிருக்கின்றார் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும், தமிழ் மக்கள் தேசிய முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.**

**பிரிட்டிஷார் இலங்கையை ஆக்கிரமித்து இருந்த போது, பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தவர், கெப்பிட்டிபொல திஸாவ. பிரிட்டிஷாரால் ஒரு 'கிரிமினல்' என்றும், 'தீவிரவாதி' என்றும் அறிவிக்கப்பட்டவர். தேடப்படும் குற்றவாளி என்றும் பிரகடனப்படுத்தப்பட்டவர். ஆனால் அவர் பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பிலிருந்து தனது மக்களை விடுவிக்கப் போராடியவர். இப்போது அவர் சுதந்திரப் போராட்ட வீரராகவும், ஒரு கதாநாயகராகவும் போற்றப்படுகின்றார். பிரிட்டிஷ் காலத்தின் 'கிரிமினல்' இன்று சுதந்திரப் போராட்ட வீரர்.**

**ஆகவே தம்முடைய உரிமைகளுக்காக, சுதந்திரத்துக்காக கூட்டாகவோ, தனித்தோ போராடும் ஒருவரை நீங்கள் வெகு இலகுவாக 'பயங்கரவாதி' பட்டம் சூட்டிக் கொள்ள முடியாது.**

**எங்கள் இளைஞர்கள், சிங்கள இராணுவத்தை விரட்டுவதற்காகப் போராடினார்கள். அவர்களை நீங்கள் உங்கள் விருப்பப்படி 'பயங்கரவாதிகள்' என்று அழைக்க முடியாது. அவர்கள் எவரும் 'பயங்கரவாதிகள்' அல்லர் என்று வெளிப்படையாகவும் அப்பட்டமாகவும் உரைத்திருக்கின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்.**

**இலங்கை இராணுவத்தில் 99 வீதம் சிங்களவர்களே. அதனால் அது 'சிங்கள இராணுவம்'தான், 'இலங்கை இராணுவம்' அல்ல என்று சுட்டிக்கட்டும் அவர், வெள்ளையரின் கீழ் இலங்கை இராணுவம் இருந்தபோது இராணுவத்தில் தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர்கள், மலாயர்கள் என பல்லினத்தவரும் தாராளமாக இருந்தனர் என்பதையும் பகிரங்கமாகச் சுட்டிக்காட்டுகின்றார்.**

**இந்த சிங்கள இராணுவமும் அதன் ஆதரவாளர்களும்தான் எங்கள் தரப்பில் இறந்த இளைஞர்களை 'பயங்கரவாதிகள்' என்றும், 'பிரிவினவாதிகள்' என்றும் பட்டம் சுட்டுகின்றனர் என்பதையும் விளக்குகின்றார் அவர்.**

**ஒருவரின் கொலை நடவடிக்கையை சாதாரண குற்றவியல் சட்டத்தின் கீழ் கையாளும் அரசு, மற்றொரு கொலைச் சம்பவத்தை 'பயங்கரவாதமாக' அடையாளப்படுத்தி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வித்தியாசமாகக் கையாள்கின்றது. இங்கு அரசு தன் விருப்பப்படி, ஆள்களுக்கு 'பயங்கரவாதி' பட்டம் சூட்டுகின்றது. இது பெரும் அபத்தம் என்கிறார் நீதியரசர் விக்னேஸ்வரன் எம்.பி.**

**அரசு, தமிழ் இளைஞர்களை – தமது வாழ்வியல் உரிமைகளுக்காகப் போராடியோரை – 'பயங்கரவாதிகள்' என்றும், அவர்களின் நடவடிக்கையை 'பயங்கரவாதம்' என்றும் அடையாளப்படுத்தினாலும் எது உண்மையில் பயங்கரவாதம் என்பதை பட்டவர்த்தனமாக எடுத்துரைத்திருக்கின்றார் அவர்.**

***"உண்மையில் இலங்கையில் காலத்திற்குக் காலம் ஆட்சியில் இருந்த அரசுகளினல்தான் 'பயங்கரவாதம்' முதலில் அறிமுகப் படுத்தப்பட்டது. தமது குண்டர்கள் மூலம் தமிழர்கள் மீது பயங்கரவாதத்தை அந்த அரசுகள் ஏவி விட்டன. அது 1958, 1961, 1977, 1983 எனத் தொடர்ந்தது. அப்பாவிகள் குத்திக் கொல்லப்பட்டார்கள். பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுக் கொல்லப்படனர். சிறுவர்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர். பல அப்பாவிகள் கார்களுக்குள் போட்டுத் தீ வைத்துப் படுகொலை செய்யப்பட்டனர். தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காக மட்டுமே அவர்களின் வீடுகள் எரிக்கப்பட்டன. அப்போது இருந்த அரசுகள் தமது பொலிஸாரையும், இராணுவத்தினரையும் மறுபுறம் திரும்பி உதாசீனமாகப் பார்த்திருக்க வைத்துக் கொண்டு, இவ்வளவையும்அரங்கேற்றின. அப்போது அரச பயங்கரவாதம்தான் முழு அளவில் கட்டவிழ்ந்தது"*** **– என்ற உண்மையை போட்டுடைக்கும் அவர், தொடர்ந்து ஒரு நியாயமான வினாவையும் சிங்கள தேசத்தயும் உலகையும் நோக்கி முன்வைக்கின்றார்.**

**சுதந்திர இலங்கையில் இவ்வளவு கேவலமாக – மோசமாக – அரச பயங்கரவாதம் ஏவி விடப்படுவதற்கு தமிழர்கள் அப்படி என்ன பாவம் செய்தார்கள்?**

**பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் நன்கு கற்றறிந்தவர்களாக, கடின உழைப்பாளர்களாக, மனச்சாட்சிப்படி கடும் பணியாற்றுபவர்களாக அவர்கள் இருந்தமை ஒன்றே அவர்கள் இழைத்த தவறு என மனம் வெதும்புகின்றார் நீதியரசர்.**

**அது மட்டுமல்ல, இப்படி அப்பாவித் தமிழ் மக்கள் மீது அரச பயங்கரவாதம் – சிங்கள மேலாண்மைக் கொடூரம் – மிக மோசமாக ஏவி விடப்பட்டதனால், வேறு வழியின்றி, தற்பாதுகாப்புக்கும் தமது உரிமைகளை நிலைநாட்டவும் ஆயுதம் ஏந்தும் கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டார்கள் தமிழ் இளைஞர்கள் என்று விளக்குகின்றார்.**

**அதனால் இங்கு பயங்கரவாதம் என்பது சிங்களத்தின் முட்டாள் தனமான பிற்போக்குவாதப் பிரசாரமின்றி வேறில்லை. அதை வெளிப்படையாக, துணிச்சலுடன் இந்தச் சமயத்தில் உரைக்கும் நீதியரசர் விக்னேஸ்வரன் அதற்காகப் பெரிதும் மதிக்கப்பட வேண்டியவர்.**

# 200 ஏக்கர் நிலத்தில் தொழில் பேட்டை மட்டக்களப்பில் பலருக்கு தொழில் வாய்ப்பு

## ஏற்பாடுகளை மேற்கொள்கிறார் வியாழேந்திரன்



மட்டக்களப்பு மாவட்டத்தில் 200 ஏக்கர் நிலத்தில் தொழில் பேட்டை ஒன்றை அமைத்து ஆயிரத்துக்கும் அதிகமானவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் கமத்தொழில், நீர்ப்பாசன அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

கடந்த அரசாங்கம் வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு எந்த வேலைத்திட்டத்தையும் மேற்கொள்ளவில்லை. ஆனால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான எமது அரசாங்கத்தில் பிரதமரினால் முன்வைக்கப்பட்டிருக்கும் வரவு செலவு திட்டத்தில் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருக்கின்றது.

அதேபோன்று கடந்த காலங்களிலும் எமது அரசாங்கமே வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் என்ற வேலைத்திட்டங்களால் பல அபிவிருத்திகளை வடக்கு – கிழக்கு பிரதேசங்களுக்கு மேற்கொண்டன.

அத்துடன் ஏப்ரல் தாக்குதல் மற்றும் கொரோனாத்தொற்று போன்ற காரணங்களால் உலக பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருக்கின்றன. எமது பொருளாதாரமும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறான நிலையிலும் மிகவும் நெருக்கடிக்கு மத்தியில் சிறந்ததொரு வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. எனது அமைச்சு கமத்தொழில் அமைச்சுக்கு கீழே இருக்கின்றது. எனது அமைச்சின் கீழும் விவசாய வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேலைத்திட்டம் ஒன்றை தயாரித்திருக்கின்றோம்.

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 200 ஏக்கர் நிலத்தில் 4 இற்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளைக்கொண்டுவந்து தொழில் பேட்டை ஒன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளோம். அதற்கான அமைச்சரவை அனுமதியும் கிடைத்திருக்கின்றது. இதன் மூலம் ஆயிரக்கணக்கானவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும்.

கடந்த அரசாங்கம் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு ஒரு தொழிற்சாலையையேனும் திறக்கவில்லை. வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையில் ஆயிரம் பேர்வரை தொழில் புரிந்துவந்தனர். அதனைக்கூட அவர்களால் மீள ஆரம்பிக்க முடியாமற்போனது. ஆனால் எமது அரசாங்கம் அதனை ஆரம்பித்திருக்கின்றது.– என்றார்.

# சீதுவையில் ஒரு வயதுக் குழந்தை உட்பட ஒரே குடும்பத்தில் 6 பேருக்கு கொரோனா!

சீதுவ, ரத்தொலுகம பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் உட்பட எட்டு பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கட்டுநாயக்க சீதுவை நிர்வாக பொது சுகாதார ஆய்வாளர் சுரேஷ் குமார தெரிவித்தார்.

இவ்வாறு கொரோனா தொற்றுக்குள்ளான குடும்பத்தில் ஒரு வயது குழந்தையும் அவரது தாயும் நோய் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுரேஷ் குமார மேலும் தெரிவித்தார்.

அத்துடன் கம்பஹா மாவட்டத்தில் நேற்று வியாழக்கிழமை மாலை 04 மணிவரை முடிவடைந்த 24 மணித்தியாலத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 71 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் இதனையடுத்து, கம்பஹா மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 094 ஆக பதிவாகியுள்ளதாக கம்பஹா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் மிகார ஏப்பா தெரிவித்தார்.

இவ்வாறு பதிவான 71 நோயாளர்களில் 18 பேர் வத்தளை சுகாதார பிரிவிலும், 10 பேர் பியகம சுகாதார பிரிவிலும் பதிவாகியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று மாலை வரை கம்பஹா மாவட்டத்தில் 76 ஆயிரத்து 246 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் கம்பஹா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் மிகார ஏப்பா தெரிவித்தார்.

# காட்டு விலங்குகளுக்காக வைத்த மின்சாரத்தில் சிக்கி இளைஞர் சாவு!

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

செட்டிகுளம், காந்தி நகர் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

வவுனியா, செட்டிகுளம், காந்தி நகர் பகுதியில் வசிக்கும் நபர் தனது வீட்டுக்கு அருகில் இருந்த தோட்டத்தில் காட்டு விலங்குகளின் பாதுகாப்புக்காக மின்சாரம் பொருத்தியுள்ளார்.

இந்நிலையில் நேற்று மாலை தோட்டத்தில் குரங்குகள் நின்றமையால் அதை விரட்டிச் சென்ற போது தவறுதலாக தோட்ட வேலியில் இருந்த மின்சாரத்தில் அகப்பட்டு மரணமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மின்சாரம் தாக்கி காட்டு யானை பலி!

*பொலன்னறுவை வனவிலங்கு பிராந்தியத்துக்கு உட்பட்ட எலஹர வனவிலங்கு சரணாலயத்திற்குச் சொந்தமான காட்டு யானை ஒன்று மின்சார வேலியில் இருந்த மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளது.*

*நேற்றுமுன்தினம் புதன்கிழமை கரண்டகொள்ள பகுதியில் உள்ள ஒரு காணியில் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்டுள்ள மின்சார வேலியில் மின்சாரம் தாக்கியதன் காரணமாக அந்தக் காட்டு யானை இறந்துள்ளதாக வனவிலங்கு பிராந்திய அலுவலகம் தெரிவித்துள்ளது.*

*மனித நடவடிக்கைகள் காரணமாக எலஹர வனவிலங்கு சரணாலயத்தில் ஒரே வாரத்திற்குள் பதிவான இரண்டாவது காட்டு யானையின் மரணம் இது என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதேவேளை, பொலன்னறுவை பகுதியில் இந்த ஆண்டில் உயிரிழந்துள்ள 45 ஆவது காட்டு யானை இது என்பதும் குறிப்பிடத்தக்கது.*

# மும்பை தாக்குதல் ஏற்படுத்திய காயத்தை இந்தியா ஒருநாளும் மறக்காது - பிரதமர்

மும்பை தாக்குதல் ஏற்படுத்திய காயத்தை இந்தியா ஒருநாளும் மறக்காது. அந்தத் தாக்குதலின் விளைவு இந்தியா இன்று புதிய கொள்கைகளை வகுத்து பயங்கரவாதத்தைத் திறம்பட எதிர்கொள்கிறது என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாட்டில் மீண்டும் மும்பை தாக்குதல் நடைபெறாத வகையில் பாதுகாத்து வரும் வீரர்களுக்கு தலை வணங்குகிறார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மும்பை தாக்குதலின் 12 ஆவது நினைவு தினத்தை முனிட்டு காணொலி காட்சி வாயிலாக கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர் –

அரசமைப்பு தினத்தைக் குறிப்பிட்டு மகாத்மா காந்தியின் உத்வேகம் மற்றும் சர்தார் வல்லபாய் படேலின் அர்ப்பணிப்புக்கு தலைவணங்க வேண்டிய நாள் இது.

இதுபோன்ற பல ஆளுமைகள் இந்தியாவின் வளர்ச்சியின் பாதையை முடிவு செய்துள்ளன. அவர்களின் முயற்சிகளை நினைவில் கொள்வதற்காக அந்த



நாளை அரசமைப்பு தினமாக கொண்டாட ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நவம்பர் மாதம் 26 அன்று முடிவு செய்யப்பட்டது.

கடந்த 2008 இல் இதே நாளில் பாகிஸ்தானைச் சேர்ந்த பயங்கரவாதிகள் மும்பையில் தாக்குதல் நடத்தினர். வெளிநாட்டவர் நம் நாட்டு மக்கள், அதிகாரிகள், பொலிஸார் எனப் பலரும் உயிர் துறந்தனர்.

மும்பை தாக்குதல் ஏற்படுத்திய காயத்தை இந்தியா ஒருநாளும் மறக்காது. அந்தத் தாக்குதலின் விளைவு இந்தியா இன்று புதிய கொள்கைகளை வகுத்து பயங்கரவாதத்தைத் திறம்பட எதிர்கொள்கிறது. இன்றளவும் நாட்டில் மீண்டும் மும்பை தாக்குதல் போன்ற சம்பவம் நடக்காமல் பாதுகாத்து வரும் வீரர்களுக்கு நான் தலைவணங்குகிறேன். – எனக் கூறினார்.

அண்மையில் முடிவடைந்த பீகார் தேர்தல்களைப் பற்றி பிரதமர் குறிப்பிட்டார். மேலும் கொரோனா தொற்றுநோய்க்கு மத்தியில் இந்தியாவின் வலுவான தேர்தல் செயல்முறைகளை உலகம் கண்டது. அரசமைப்பிலிருந்து பெறப்பட்ட வலிமை இது போன்ற கடினமான பணிகளை எளிதாக்க உதவுகிறது என்று கூறினார்.

ஒரு நாடு ஒரு தேர்தல் என்பது விவாதத்திற்குரிய விடயமல்ல. இது இந்தியாவின் தேவை.– என அவர் தெரிவித்துள்ளார்.

# கர்நாடகாவில் திருமணத்துக்குச் சென்ற 5 இளைஞர்கள் குளத்தில் மூழ்கிப் பலி!



கர்நாடக மாநிலத்தில் திருமணம் வீட்டுக்கு சென்ற இளைஞர்கள் 5 பேர் குளத்தில் மூழ்கி பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடக மாநிலம் சிக்மகளூர் மாவட்டம் மூடிகெரே அருகே வசதாரே என்னும் கிராமம் உள்ளது. இந்தக் கிராமத்தைச் சேர்ந்த ரகு என்பவரின் சகோதரி சந்தியாவுக்கு நேற்று திருமணம் நடந்தது. திருமணத்தை முன்னிட்டு விருந்துக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. உறவினர்கள் உணவு தயாரித்து கொண்டிருக்கையில், ரகு தன் நண்பர்கள் தீபக், திலீப், சுதீப் சந்தீப் ஆகியோருடன் கிராமத்தில் இருந்த குளத்துக்கு குளிக்க சென்றுள்ளார்.

குளத்துக்கு சென்றவர்கள் நீண்ட நேரமாகியும் வீடு திரும்பவில்லை. தொடர்ந்து குளக்கரைக்கு சென்று உறவினர்கள் தேடிய போது, ஆடைகள் மட்டும் கரையில் இருந்துள்ளன. ரகு உள்ளிட்ட 5 பேரையும் காணவில்லை. இதனால், அதிர்ச்சியடைந்த உறவினர்கள் பொலிஸார் மற்றும் தீயணைப்பு துறையினருக்கும் தகவல் அளித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த தீயணைப்புத்துறையினர் குளத்துக்குள் இறங்கி தேடினர்.

அப்போது, குளத்துக்குள் இருந்து ரகு, தீபக், திலீப், சுதீப், சந்தீப் ஆகிய 5 பேரின் உடல்களும் கண்டெடுக்கப்பட்டன. பலியான ஐந்து பேரின் உடல்களை பார்த்து உறவினர்கள் கதறி அழுதமை காண்போரை கண் கலங்க வைத்தது. திருமண வீட்டுக்கு விருந்துக்காக வந்தவர்கள் மணப் பெண்ணின் சகோதரருடன் நீரில் மூழ்கி இறந்தமை கர்நாடக மாநிலத்தில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# மிக் – 29 கே பயிற்சி விமானம் அரபிக் கடலில் விழுந்து விபத்து

*மிக் - 29 கே பயிற்சி ஜெட் விமானம் ஒன்று அரபிக் கடலுக்குள் விழுந்து விபத்துக்குள்ளானது.*

*40 இற்கும் மேற்பட்ட மிக் - 29 கே விமானங்களை, இந்திய கடற்படை இயக்கி வருகிறது. அதில்*



*ஒரு பயிற்சி விமானம், நேற்று மாலை 5 மணியளவில் அரபிக் கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தை தொடர்ந்து நடைபெற்ற தேடுதல் வேட்டையில் ஒரு விமானி மீட்கப்பட்டார்.*

*விமானத்தில் பயணித்த இன்னொரு விமானியைத் தேடும் பணி தீவிரமாக நடைபெறுகிறது. விபத்து தொடர்பாக உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு இருப்பதாகக் கடற்படை தெரிவித்துள்ளது. கடந்த ஓராண்டில் மிக் - 29 கே விமானம் விபத்தில் சிக்குவது இது 3ஆவது முறையாகும். கடந்த ஆண்டு நவம்பர் மாதம், கடந்த பெப்ரவரி மாதமும் 2 விமானங்கள் விபத்தில் சிக்கின. எனினும் அதில் பயணித்த விமானிகள் பாதுகாப்பு சாதனத்தை இயக்கி உயிர் தப்பினர்.*

# புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் உற்பத்தி இந்தியா நான்காவது இடத்தில் - மோடி

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் மின் உற்பத்தி செய்வதில் உலக அளவில் இந்தியா நான்காவது இடத்தில் இருப்பதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மூன்றாவது சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீடு மற்றும் கண்காட்சிக் கூட்டத்தில் காணொளி தொடர்பாடல் மூலம் மோடி கலந்துகொண்டார்.

இதன்போது உரையாற்றிய அவர், கடந்த ஆறு ஆண்டுகளில் இந்தத் துறையில் இரண்டரை மடங்கு நாட்டின் செயற்திறனை இந்தியா அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

அடுத்த 10 ஆண்டுகளில் ஆண்டுக்கு 2 ஆயிரம் கோடி டொலர் மதிப்பில் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தும் விதமாக அதிக அளவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள் செயற்படுத்தப்படும் எனவும் மோடி குறிப்பிட்டுள்ளார்.

# வங்கக் கடலில் மற்றுமொரு காற்றழுத்தத் தாழ்வு மண்டலம்!



வங்க கடலில் மேலும் ஒரு காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த மையம் விடுத்துள்ள செய்தி குறிப்பில் –

எதிர்வரும் 29 ஆம் திகதி வங்க கடலின் தென் கிழக்கு பகுதியில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுநிலை உருவாகுமெனக் கூறப்பட்டுள்ளது.

இந்த காற்றழுத்தத் தாழ்வு மேலும் வலுப்பெறும் என்றும், அதன் பின்னரே அது புயலாக உருவெடுக்குமா இல்லையா என்பது தெரியவரும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இன்று அதிகாலை கரையைக் கடந்த நிவர் புயலால் வட தமிழகத்தில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குஜராத் கொரோனா வைத்தியசாலையில் அவசரப் பிரிவில் தீ விபத்து ஐவர் பலி!

## ஒருவர் கவலைக்கிடம்



குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில், கொரோனாவுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில் 5 நோயாளிகள் உடல் கருகி உயிரிழந்தனர். மேலும் ஒருவர் கவலைக்கிடமான நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

தீ விபத்தில் சிக்கிய 30 இற்கும் மேற்பட்ட நோயாளிகள் தீயணைப்புத்துறையினரால் மீட்கப்பட்டனர். அவர்களுக்கு ஏற்பட்ட தீக்காயங்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வேறு வைத்திய சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கல்யாணமாலை
வட சர்வதேச
திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1986.03.08
மதம் - இந்து (குருகுலம் K+K)
நட்சத்திரம் - அவிட்டம் 2
செவ் - -------
பாவம் - 24
கல்வி - பட்டதாரி
தொழில் - கனடா PR
எதிர்பார்ப்பு - படித்த பெண்
வேறு எதிர்பார்ப்பில்லை

மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1981.04.15
மதம் - இந்து P
நட்சத்திரம் -பூரம்
பாவம் - 24
செவ் - -----
கல்வி - பட்டதாரி
தொழில் - ஆசிரியை
எதிர்பார்ப்பு - உத்தியோகம்

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

# புர்கினா பாஸோவின் ஜனாதிபதி தேர்தல் ஜனாதிபதி ரோச் கபோர் மீண்டும் வெற்றி!



புர்கினா பாசோவின் ஜனாதிபதி தேர்தலில் தேசிய சுயாதீன தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள ஆரம்ப முடிவுகளின்படி, ஜனாதிபதி ரோச் கபோர் மீண்டும் தலைவராகத் தெரிவாகியுள்ளார்.

இந்நிலையில், இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கு புர்கினா பாசோவின் தலைவராக அவர் இருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கபோர், 57.87 சதவீத வாக்குகளைப் பெற்று ஆரம்பக்கட்ட தேர்தல் முடிவில் வென்றுள்ளார் எனத் தேர்தல் ஆணையகத்தின் தலைவர் நியூட்டன் அகமது பாரி இன்று அறிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாகத் தெரிவாகிய கபோருக்கும் அவருக்கு எதிராக 12 போட்டியாளர்களுக்கும் இடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தேர்தல் நடைபெற்றது.

இதேவேளை, மேற்கு ஆபிரிக்காவின் சஹேலில் அதிகரித்துவரும் பாதுகாப்பு நிலைமைக்கு மத்தியில் புர்கினா பாசோவின் பரந்த பகுதிகளில் செயற்பட்டு வரும் அல் - குவைதா மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ் ஆயுதக் குழுக்களால் தேர்தல் வாக்களிப்பு பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கடந்த ஆண்டு, இந்த மோதலில் புர்கினா பாசோவில் சுமார் இரண்டாயிரம் பேர் கொல்லப்பட்டும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான புர்கினாபே மக்கள் சண்டையால் இடம்பெயர்ந்தும் உள்ளனர்.

இந்த சூழலிலும், கபோர் கிட்டத்தட்ட மூன்று மில்லியன் வாக்காளர்களில் 1.6 மில்லியன் வாக்குகளைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ‘ஜப்பான் கடல்’ என்ற பகுதியில் அமெ. கப்பலை விரட்டிய ரஷ்யா!

‘ஜப்பான் கடல்’ என்று அழைக்கப்படும் பகுதியில் தமது கடற்பிரதேசத்தில் நுழைந்த அமெரிக்க கடற்படையின் போர்க்கப்பல் ஒன்றைத் தமது போர்க்கப்பல் விரட்டியடித்ததாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

பீட்டர் தி கிரேட் வளைகுடாவில் தமது கடற்பரப்பில் 2 கி.மீ. தூரம் பயணித்த யு.எஸ்.எஸ்.ஜான் எஸ் மெக்கெய்ன் என்ற அமெரிக்கப் போர்க் கப்பல் மீது மோதிவிடுவதாக தாங்கள் மிரட்டிவிட்டதாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

ஆனால், செவ்வாய்க்கிழமை நடந்ததாக கூறப்படும் இந்த சம்பவத்தில், தாங்கள் எந்த தவறும் இழைக்கவில்லை என்றும், தங்கள் கப்பல் துரத்தியடிக்கப்பட



வில்லை என்றும் கூறி ரஷ்யாவின் கூற்றை அமெரிக்க கடற்படை மறுத்துள்ளது.

ஜப்பான், ரஷ்யா, கொரிய நாடுகள் ஆகியவை சூழ்ந்த இந்த கடற்பரப்புக்கு ஜப்பான் கடல் என்று பெயர். இதன் இன்னொரு பெயர் கிழக்குக் கடல் என்பதாகும்.

முன்னதாக 1988 இல் கருங்கடலில் ரஷ்யக் கப்பல் ஒன்று அமெரிக்கக் கப்பலை மோதியது. 2017 ஆம் ஆண்டு சிங்கப்பூர் அருகே ஓர் எண்ணெய்க் கப்பல் மீது மோதியது. இதில் 10 மாலுமிகள் கொல்லப்பட்டனர்.



## போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை ஒடுக்க புதிய சட்டம் பாவிக்கும் தாய்லாந்து பொலிஸ்!

மன்னராட்சியை முடிவுக்கு கொண்டு வரும் போராட்டத்தில் தீவிரம் காட்டிவரும் மாணவர்களை, ஒடுக்குவதற்கான பிரம்மாஸ்திரமாக தாய்லாந்து பொலிஸார், 'லெஸ் மஜாஸ்ட்டே’ எனும் சட்டத்தை கையில் எடுத்துள்ளனர்.

லெஸ் மஜாஸ்ட்டே எனும் இந்த சட்டத்தின்படி அரச குடும்பத்தை எதிர்த்து யார் எந்தக் கருத்தைச் சொன்னாலும், அவர்களுக்கு 15 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

அரச குடும்பத்தினர் மற்றும் அரசு அதிகாரிகள் மட்டுமன்றி யார் வேண்டுமானாலும் இந்த சட்டத்தின்கீழ் ஒருவர் மீது முறைப்பாடு பதிவு செய்யலாம். எனவே பெரும்பாலும் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்த இந்த சட்டம் கடந்த சில ஆண்டுகளாக புழக்கத்தில் இல்லாமல் இருந்து வந்தது.

இந்த சட்டத்தின் பயன்பாட்டைக் காண விரும்பவில்லை என மன்னர் மகா வஜிரலோங்க்கோர்ன் அரசாங்கத்துக்கு அறிவித்த பின்னர் கடந்த 3 ஆண்டுகளாக இந்த சட்டத்தின்கீழ் யார் மீதும் வழக்குகள் பதிவு செய்யப்படாமல் இருந்தன.

இந்த சூழலில்தான் மாணவர்களின் போராட்டத்தை ஒடுக்குவதற்காக இந்த சட்டத்தை பொலிஸார் கையில் எடுத்துள்ளனர். அதன்படி மாணவர்கள் போராட்டக்குழுக்களின் தலைவர்கள் 12 பேர் மீது லெஸ் மஜாஸ்ட்டே சட்டத்தின் கீழ் மன்னராட்சியை இழிவுபடுத்தியதாக வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இது தொடர்பாக இந்தத் தலைவர்கள் 12 பேருக்கும் பொலிஸார், அழைப்பாணை அனுப்பியுள்ளனர். இதில் அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் 15 ஆண்கள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சூடானின் முன்னாள் பிரதமர் கொரோனா தொற்றால் சாவு!

சூடானின் முன்னாள் பிரதமர் சாதிக் அல் மஹ்தி கொரோனா வைரஸ் (கொவிட் - 19) தொற்று காரணமாக உயிரிழந்துள்ளார்.

சூடான் நாட்டில் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட கடைசி பிரதமராக இருந்தவர் சாதிக் அல் மஹ்தி, கடந்த ஒக்ரோபர் மாதம் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து மேல் சிகிச்சைக்காக ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில், சிகிச்சை பலனளிக்காமல் 84 வயதான சஹ்தி நேற்று (வியாழக்கிழமை) காலை உயிரிழந்தார்.

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நப



ராக இருந்த சஹ்தி, 1989 ஆம் ஆண்டு சூடான் குடியரசுத் தலைவரால் கொண்டுவரப்பட்ட இராணுவ ஆட்சியால் பிரதமர் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டார்..

உம்மா கட்சி அல் - பஷீரின் கீழ் மிகப் பெரிய எதிர்க்கட்சிகளில் ஒன்றாகும். அல் - மஹ்தி அவர் கவிழ்க்கப்பட்ட பின்னரும் ஒரு செல்வாக்கு மிக்க நபராக இருந்தார்.

ஓர் அறிக்கையில், அல் - மஹ்தி சூடானில் உள்ள ஓம்துர்மன் நகரில் வெள்ளிக்கிழமை காலை அடக்கம் செய்யப்பட்டார் என்று உம்மா கட்சி தெரிவித்துள்ளது.

‘அவரது மரணம் தொடர்பாக சூடான் மக்களுக்குஎங்கள் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்’ என்று கட்சி தெரிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ சூடான் செய்தி நிறுவனம் அல் - மஹ்தி ’சூடான் அரசியல் மற்றும் பொது வாழ்வில் தொடர்ச்சியாக 65 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு தனித்துவமான நபராக இருந்தார், நிகழ்வுகளை வடிவமைத்து நாட்டின் போக்கிற்கும் வளர்ச்சிக்கும் பெரிதும் பங்களித்தார்’ - எனக் கூறியுள்ளது. சூடானில் ஜனநாயகம் மீதான அவரது உறுதிப்பாட்டையும் பாராட்டியது.

## ஜோர்தானில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 2 லட்சம் கடந்தது!



ஜோர்தானில் கொரோனா வைரஸ் (கொவிட்-19) பெருந் தொற்றால், இதுவரை மொத்தமாக இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளி விவரங்களின் படி, ஜோர்தானில் இதுவரை இரண்டு லட்சத்து மூவாயிரத்து 21 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலகளவில் கொவிட் - 19 தொற்றால் அதிக பாதிப்பை எதிர்கொண்ட 38 ஆவது நாடாக விளங்கும் ஜோர்தானில், இதுவரை இரண்டாயிரத்து 509 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் வைரஸ் தொற்றால் ஐந்தாயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 67பேர் உயிரிழந்துள்ளனர். தற்போதுவரை வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 64 ஆயிரத்து 862 பேர் அங்குள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 481 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

அத்துடன் இதுவரை ஒரு லட்சத்து 35 ஆயிரத்து 650 பேர் வைரஸ் தொற்றிலிருந்து மீண்டு வீடு திரும்பியுள்ளனர்.

## கொரோனாவால் உலகளவில் பாதிப்பு 6 கோடியை தாண்டியது!

உலகளவில் கொரோனா வைரஸ் (கொவிட் - 19) பெருந்தொற்றால், ஆறு கோடிக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் படி, உலகளவில் கொவிட் - 19 தொற்றால் ஆறு கோடியே ஏழு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இதுவரை மொத்தமாக 14லட்சத்து 26 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

இதுதவிர, தற்போதுவரை நான்கு கோடியே 20 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வைரஸ் தொற்றிலிருந்து மீண்டும் வீடு திரும்பியுள்ளனர்.

உலகளவில் கொவிட் - 19 தொற்றால் அதிக பாதிப்பு மற்றும் உயிரிழப்பைச் சந்தித்த நாடாக அமெரிக்கா விளங்குகின்றது.

அமெரிக்காவில் இதுவரை வைரஸ் தொற்றால் ஒரு கோடியே 31 லட்சத்து 37ஆயிரத்து 962 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இரண்டு லட்சத்து 68 ஆயிரத்து 219 பேர் உயிரிழந்துள்ளனர்.

# தமிழ் மக்களும் எமது மக்களே ஆவர் கடந்த காலத்தை மறந்து இணையுங்கள்!

## அமைச்சர் சமல் ராஜபக்ஷ சபையில் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 27

இந்த நாட்டில் ஓர் இனத்திற்கு மாத்திரம் முன்னுரிமை கொடுக்கவில்லை, தமிழ் மக்களும் எமது மக்களே, அவர்களுக்கான சகல உதவிகளையும் பெற்றுக் கொடுக்கவே நினைக்கின்றோம். கடந்த காலத்தை மறந்துவிட்டு தமிழர்கள் எம்முடன் ஒன்றிணையுங்கள் என அமைச்சர் சமல் ராஜபக்ஷ சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக் கிழமை கமத்தொழில், நீர்ப்பாசன அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் -

உலகில் 200 கோடி மக்கள் அதியுச்ச நீர் தட்டுப்பாட்டுடன் வாழ்ந்து வருகின்றனர். உலகில் ஏற்பட்டு வருகின்ற அனர்த்தங்கள் காரணமாக 2030 ஆம் ஆண்டில் 70 கோடி மக்கள் அகதிகளாவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கும் இந்த அச்சுறுத்தல் உள்ளது. உலக வெப்பமாதல் நிலைமைகளுக்கு நாமும் முகங்கொடுத்து வருகின்றோம். இதில் உலகிலுள்ள 180 நாடுகளில் அதிக அச்சுறுத்தல் கொண்ட பத்து நாடுகளில் இலங்கையும் உள்ளது.

2020 ஆம் ஆண்டில் உலகில் எச்சரிக்கையான காலநிலை கொண்ட நாடுகளின் பட்டியலில் 6 ஆவது இடத்தில் இலங்கை உள்ளது. இலங்கையில் நீர் நிலைகளைப் பாதுகாத்து அதன் மூலமாக குடிதண்ணீர் பாதுகாப்பை முன்னெடுக்க நாம் தவறி வருகின்றோம் என்பதைக் கூறியாக வேண்டும்.

அதுமட்டுமல்ல இன்று உலகளவில் பரவிக்கொண்டுள்ள கொவிட் - 19 வைரஸ் காரணமாக முறையான உணவுகள் கிடைக்காது உலகில் 13 கோடியே 50 லட்சம் மக்கள் தவித்துவருகின்றனர் என உலக உணவு ஸ்தாபனம் தெரிவிக்கின்றது. இதில் உணவு உற்பத்தியில் நெருக்கடிகளை சந்திக்கும் அபாயமுள்ள நாடுகளில் இலங்கையும் உள்ளதாக உலக உணவு ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

எனவே இப்போதே நாம் தேசிய உணவு உற்பத்திகளில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இல்லையேல் இலங்கையில் 25 வீதமானவர்கள் உயரிய உணவு பற்றாகுறைக்கு முகங்கொடுக்க வேண்டிவரும், அதாவது இலங்கையின் சனத்தொகையில் 4 கோடியே 70 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்படுவர் என எச்சரிக்கப்படுகின்றது.

எனவே எமது அரசு நாட்டின் தேசிய உற்பத்தியில் விவசாயத்தை ஊக்குவிக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. 16 வகையான விதைகளை நாம் குறைந்த விலைகளில் விவசாயிகளுக்குக் கொடுத்து சிறு உற்பத்திகள் மற்றும் அத்தியாவசிய தேவைகளை நாமே பூர்த்தி செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். அத்துடன் நெல் உற்பத்தியை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

குடிதண்ணீர் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வுகளை முன்னெடுத்தாக வேண்டும். வறண்ட பகுதிகளில் மக்கள் அதிகளவில் குடிதண்ணீர் இல்லாது நோய்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். வடக்கு மாகாணம் அதிக அச்சுறுத்தலில் உள்ளதென்பதையும் கருத்தில் கொண்டே மன்னார், வடமாராச்சி நீர் திட்டத்தை உருவாக்கியுள்ளோம்.

மகாவலி எல் வலயம் உருவாக்கப்பட்டுள்ளமை சகல மக்களுக்குமான பயன்களை பெற்றுக்கொள்ளவே தவிர எந்தவோர் இனத்தையும் தண்டிக்கவோ நிராகரிக்கவோ அல்ல. சகல மக்களுக்கும் ஒரே மாதிரியான சலுகளைப் பெற்றுக் கொடுக்க நினைக்கிறோம்.

தமிழர்களும் எமது மக்கள். சகல மக்களுக்கும் இடங்களை பெற்றுக்கொடுப்போம். இதில் ஓர் இனத்திற்கு மட்டும் முன்னுரிமை அல்ல. அவ்வாறு நடந்தவற்றை மறந்து எதிர்காலத்தை நோக்கிப் பயணிப்போம். யாழ்பாண மக்கள் மிகவும் அதிகமான கஷ்டபடுகின்றனர். அவர்களின் பொருளாதாரதையும் முன்னேற்ற நாம் அனைவரும் ஒன்றினைவோம். - என்றார்.

சபையில் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சார்ள்ஸ் நிர்மலநாதன்:- அமைச்சர் அவர்களே, மகாவலி எல் வலயம் உருவாக்கப்பட்டு இன்று 32 ஆண்டுகளாகின்றது, இன்றுவரை மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் தமிழ் மக்களுக்கு ஒரு துண்டு நிலமேனும் கொடுக்கவில்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் என்றார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் சமல் ராஜபக்ஷ:- இவற்றை மறந்து முன்னோக்கி பயணிப்போம், அனைவரும் ஒன்றினைவோம். - என்றார்.

# இலங்கைக்கு எதிரான பிரேரணை மார்ச் மாதம் ஐ.நா.வில் வருகிறது!

## ஞாபகப்படுத்தினார் கிரியெல்ல

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் போர்குற்ற உள்ளக விசாரணை பிரேரணையில் இருந்து இலங்கை நீங்கியதால் அடுத்த மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராக பிரேரணை ஒன்றை நிறைவேற்றவுள்ளதாக பிரித்தானிய நாடாளுமன்றத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், அரசாங்கத்தின் நகர்வுகள் இலங்கைக்கு பாரிய நெருக்கடியை உருவாக்கப்போகின்றன எனவும் எதிர்க்கட்சி உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல சபையில் மீண்டும் எச்சரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக் கிழமை இடம்பெற்ற 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கமத்தொழில், நீர்ப்பாசன அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் -

சபையில் வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் சில காரணிகளைக் குறிப்பிட்டேன். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ ஐ.நா. செயலருடன் இணங்கிய வாக்குறுதிகள் தொடர்பாகத் தெரிவித்தேன். இதில் உள்ளக விசாரணைக்கு அவர் இணங்கினார். ஆனால் ராஜபக்ஷ அரசாங்கம் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. இந்நிலையில் எமது ஆட்சியில் நாம் உள்ளக விசாரணைக்கு இணக்கம் தெரிவித்தோம். எனினும் இப்போது மீண்டும் இந்த அரசாங்கம் பிரேரணையில் இருந்து விலகுவதாகத் தெரிவித்துள்ளனர்.

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. அது என்னவென்றால் நாம் போர்குற்ற உள்ளக விசாரணை பிரேரணையில் இருந்து நீங்கியதால் அடுத்த மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராக பிரேரணை ஒன்றை நிறைவேற்றவுள்ளதாக அவர்கள் தீர்மானம் எடுத்துள்ளனர். எமக்கு எதிராக பிரேரணை ஒன்று வருகின்றதென்றால்



அது மிக பாரதூரமான விடயமாகும். 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த நிலைமை என்ன என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் எமக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

2015 ஆம் ஆண்டில் நாம் பொருளாதாரத் தடையை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இருந்தோம். இந்த பொருளாதாரத் தடைகளுக்கு முகங்கொடுக்க முடியாத காரணத்தால் தான் 2015 ஆம் ஆண்டு தேர்தலுக்கு மஹிந்த ராஜபக்ஷ சென்றார். எனவே இப்போதுள்ள நிலையில் நாட்டைக் கருத்தில் கொண்டு தீர்மானம் எடுக்க வேண்டும் என அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன். - என்றார்.

# வீதிப் போக்குவரத்திலும் எச்சரிக்கை அவசியம்!

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

வீதி விபத்துக்களின் குற்றவாளியாக தாம் பெயர் பெறக்கூடாது என்ற எண்ணத்திலேயே சாரதிகள், பயணிகள் மற்றும் பாதசாரதிகள் எப்போதும் செயற்பட வேண்டும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாட்டின் சில பகுதிகள் முடக்கப்பட்டிருந்தமையால், வீதி விபத்துகள் ஓரளவு குறைவடைந்திருந்தன. எனினும் தற்போது இந்த விபத்துகள் அதிகரித்து வருகின்றமை அவதானிக்க கூடியதாக இருக்கிறது. அதற்கமைய கடந்த வியாழக்



கிழமை இடம் பெற்ற இரு வாகன விபத்துகளில் இருவர் உயிரிழந்துள்ளமையுடன், மேலும் பலர் காயமடைந்திருந்தனர்.

பெரும்பாலான வாகன விபத்துகள் சாரதி மற்றும் பாதசாரதிகளின் கவனக்குறைவின் காரணமாகவே இடம்பெறுகின்றன. இதனால் எப்போதும் தாம் வாகன விபத்துகளுக்குக் காரணமாக இருக்க கூடாது என்ற எண்ணத்திலேயே வாகன சாரதிகள், பயணிகள் மற்றும் பாதசாரதிகள் செயற்பட வேண்டும்.

வருடத்திற்கு வாகனவிபத்துகளால் எமது நாட்டில் 3 ஆயிரம் பேர் வரை உயிரிழக்கின்றமையுடன், 20 ஆயிரம் பேர் வரையில் காயமடைவர். இதனால் இவ்வாறான உயிரிழப்புகளைத் தவிர்ப்பதற்காக நாம் எப்போதும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். மழைக் காலங்களின் போதும் மிகுந்த கவனத்துடன் வாகனத்தை செலுத்த வேண்டும். – என்றார்.

# ஷானி அபயசேகரவின் பாதுகாப்பை உறுதிசெய்யுமாறு வேண்டுகோள்!

## விடுத்தது மனித உரிமைகள் ஆணைக்குழு

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவின் உயிர்ப்பாதுகாப்பை உறுதிசெய்ய, போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கோரியுள்ளது.

சிறைச்சாலைகள் ஆணையாளர் துார உப்புல்தெனியவுக்கு அந்த ஆணைக்குழு விடே கடிதம் ஒன்றை அனுப்பி இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஷானி அபேசேகரவுக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளிப்பட்ட நிலையில், அதனை மையப்படுத்தி அவரது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதாகப் பல முறைப்பாடுகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு கிடைத்தன எனவும், அதனை மையப்படுத்தியே, அவரது பாதுகாப்பை உறுதி செய்ய இந்தப் பரிந்துரைகளை அனுப்புவதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

ஷானி அபேசேகர விவகாரத்தை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உன்னிப்பாக அவதானிக்கும் நிலையில், அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பின் உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலையில் அவரை சேர்த்து சிகிச்சையளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என மனித உரிமைகள் ஆணைக்குழு கோரியுள்ளது.

1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் ஊடாக கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்துக்கு அமைய இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.11.2020 இல் வெளியிடப்பெற்றது.